**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 3 - 2021**

---

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 3 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது.
அம்பாந்தோட்டை சர்வதேச மைய அபிவிருத்தியின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கும் வசதி செய்வதற்கும் வீதி வலையமைப்பின் அபிவிருத்தியின் முக்கிய கூறுகளில் ஒன்றாக அடையாளப்படுத்தப்படுதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.
கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் தெற்கு அதிவேக பாதையின் வெற்றிய தொடக்கம் அந்தறவெவ வரையான 15km நீளத்தை விரிவாக்குவதற்கான மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 36,174 மில்லியன் ஆக இருந்ததுடன் சிவில் வேலைகளிற்காக ரூபா 31,574 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 252 மில்லியன் சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.
செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 சனவரி 25 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2019 யூன் 12 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 40,997.35 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் (RDA) ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான RDA இன் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 37,222.18 மில்லியன் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 2023 மார்ச் 20 வரை செயற்திட்டத்தின் முடிவுறுத்தல் நிதிக்கூற்றை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான RDA இன் சொத்துக்கள் ரூபா 3,775.17 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டது. | 3,775.17 | கருத்துரை வழங்கப்படவில்லை. | சொத்துக்கள் RDA கணக்குகளில் தாமதமின்றி மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடன் உடன்படிக்கையின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் வட்டி கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை என்பன அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 3,075.14 | கடனுக்கான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் பொதுத் திறைசேரியால் அவர்களின் வாக்குப்பணம் மூலம் செலுத்தப்பட்டு அவர்களின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, இது பொதுத் திறைசேரியின் கிரயமாகும். | செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ஆலோசனை சேவைகளுக்கான உடன்படிக்கையின் 1.10 ஆம் இலக்க விசேட நிபந்தனைகளின் பிரகாரம் ஆலோசனைக்கான கூட்டுத்தாபன வரி GOSL ஆல் செலுத்தப்பட வேண்டும். எனினும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 08 இன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ஆலோசனை சேவைகளுக்கான கூட்டுத்தாபன வரி ஏற்பாடுகள் | 30.20 | ஆலோசனைக்கான உடன்படிக்கையின் விசேட நிபந்தனைகளின் 1.10 ஆம் உட்பிரிவில் GOSL ஆல் ஆலோசகரின் கூட்டுத்தாபன வரியை கொடுப்பனவு செய்தல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நாளதுவரை செயற்திட்டத்தால் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களை கடைபிடித்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, செயற்திட்டத்தின் பொறுப்புக்கள் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | | இனங்காணப்பட்ட தொகையுடன் கொடுப்பனவு முகவர் (RDA) உடன்படவில்லை. அதன் பிரகாரம் தொடர்புடைய பொறுப்பை யதார்த்தமாக மதிப்பிட முடியாது. | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 04 இன் 18 ஆம் பிரிவின் பிரகாரம், சொத்துக்களை சுவீகரித்தல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய கடன்பெறுதல் கிரயம், அந்த சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டும். எனினும், செயற்திட்டமானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 137.41 மில்லியன் தொகையான உள்நாட்டுக் கடன் தொடர்பான கடன்பெறுதல் கிரயத்தை மூலதனமாக்கியிருக்கவில்லை. இதன் விளைவாக, செயற்திட்டத்தின் மூலதனம் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டது. | - | இந்தக் கடன்களுக்கான வட்டிக் கிரயம் அதன் முதன்மைக் கடன்பெறுபவரான RDA ஆல் தனித்தனியாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. கடன் சேவையுடன் தொடர்புடைய அனைத்து காசுப்பாய்ச்சல்களும் RDA புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் செயற்திட்டத்தின் ஈடுபாடு எதுவும் காணப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில், கடன் சேவை RDA ஆல் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், செயற்திட்டக் கணக்குகளிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களை கடைபிடித்தல். |
| (உ) | பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 08 இற்கு முரணாக, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய இழப்பீடு மற்றும் தாமத வட்டிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - | தற்போது மற்றும் எதிர்காலத்தில் காணி சுவீகரிப்பு மற்றும் வட்டி கொடுப்பனவு என்பன RDA இன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | இழப்பீடு மற்றும் தாமத வட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

(அ) காணியை பதிவுசெய்தல்

| கூறு | செயற்பாடு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | |
| | | காணித் துண்டுகள் | காணித் துண்டுகள் | | |
| காணி சுவீகரிப்பு | RDA இற்கு உரித்துறுதி உரிமைத்துவ மாற்றம் | | | செயற்திட்டம் 2019 யூன் 12 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரையிலும் காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் உப உட்பிரிவின் பிரகாரம் 32 காணித்துண்டுகள் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. | காணி சுவீகரிப்பு செயன்முறையில் வினைத்திறமையின்மை. |
| | அரச காணிகள் | 822 | 32 (அரச மற்றும் தனியார் காணிகள் இரண்டுக்கும்) | | |
| | தனியார் காணிகள் | 2,207 | | | |

**முகாமைத்துவத்தின் பதில்** இச் செயற்திட்டத்தில் பிரதேச செயலாளர்கள் கையகப்படுத்தும் உத்தியோகத்தர்களாக செயற்படுகின்றனர். அதன் பிரகாரம், இழப்பீட்டை செலுத்திய பின்னர் 44 ஆம் பிரிவின் செயன்முறையும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்கு காணி சுவீகரிப்பு பணியை பூர்த்தி செய்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| சாத்தியவள அறிக்கையின் 8.33 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், தெற்கு அதிவேக பாதையின் விரிவாக்கத்தின் பிரிவு 3 இல் சேவைப் பகுதியை நிர்மாணிப்பதற்கான இடம் இனங்காணப்பட்டிருந்தது. எனினும், அது மதிப்பிடப்பட்டிருக்காததுடன் தெற்கு அதிவேக பாதையின் முழு விரிவாக்கத்திற்கான சேவைப் பகுதிகளை நிர்மாணிப்பதற்கு BOQ ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே, வெலிபன்ன அதிவேக பாதை பாவனையாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற பின்னர் சேவைப் பகுதிகள் எதுவும் | எனினும், ESEP ஒப்பந்த BOQ எதுவும் கருத்தியல் நிலையில் சிவில் பணி ஒப்பந்தங்கள் மூலம் சேவைப் பகுதியைக் நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கவில்லை. இது திட்டங்களில் சேர்க்கப்படாத போதிலும் தலைவர் RDA, ERD மூலம் சீனாவின் EXIM வங்கியுடன் தொடர்பு கொண்டு, வீதிப் பயனர்களின் | குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை உரிய காலத்தில் அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்படவில்லை. எனவே, வெலிப்பன்னவிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலான 176 கிலோமீற்றர் தூரம் பொதுமக்கள் பயணிக்கும் போது அவர்களுக்கு சேவை வழங்கப்பட்டிருக்கவில்லை. | நலனுக்காக ESEP இற்கான இரண்டாவது சேவைப் பகுதியை நிறுவுவதன் முக்கியத்துவத்தை விளக்கினார். எனினும், சீனாவின் EXIM வங்கி இரண்டாவது சேவைப் பகுதிக்கு நிதிகளை வழங்க மறுத்தது. | |

**3.3 முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளை அடைந்துகொள்ளுதல்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| தெற்கு அதிவேக பாதை செயற்திட்டப் பகுதி 3 இன் வெற்றிய முதல் அந்தறவெவ வரையான சுமார் 15 கிலோமீற்றரின் விரிவாக்கம் மாத்தறையிலிருந்து அந்தறவெவ மற்றும் அம்பாந்தோட்டை வழியாக மத்தள வரை அணுகல் - கட்டுப்படுத்தப்பட்ட அதிவேக பாதையின் மூன்றாவது பகுதியாகும். பொருளாதார அபிவிருத்தியை தூண்டுதல், அதிக சிக்கனமான சரக்கு போக்குவரத்து மற்றும் சுற்றாடலுக்கு உகந்த அதிவேக பாதையை வழங்குதல், குறுகிய காலத்தில் சேருமிடத்தை சென்றடைவதற்கு பயணிகள் போக்குவரத்தை வழங்குதல் போன்றன செயற்திட்ட நோக்கங்களாக இனங்காணப்பட்டன. எனினும், செயற்திட்ட நோக்கங்களை மதிப்பிடுவதற்கான முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளை உருவாக்குவது மற்றும் குறிகாட்டிகளை அடைந்துகொள்வதற்கான மதிப்பீடு என்பன கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | செயற்திட்ட நோக்கங்கள் உள்ளடங்கிய தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் இறுதியில் KPIs நிறுவப்பட்டு அளவிடப்பட வேண்டும். |